03.04.2025 **OS.No. 167/2021**

வா.சா. 1 பெயர்: ரோஜியம்மாள் க/பெ. கோவிந்தசாமி

சாட்சி ஆஜர். சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1. வழக்கு எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது தாயார் சொத்தை கொடுத்ததை மோசடி செய்துள்ளதால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மகாராஜா யார் என்றால் எனது சகோதரி ராஜாமணி மகன். ராஜேஸ்வரி யார் என்றால் எனதுஅண்ணன் ராஜாவின் மனைவி. புவனேஸ்வரி யார் என்றால் அண்ணன் மகள். சக்திகுமார் யார் என்றால் தெரியவில்லை. ராஜாவின் மகன் பெயர் மாதேஷ்வரன் அவர் இறந்து விட்டார். அவர் இறந்து சுமார் 2 வருடம் இருக்கும். அவர் இறந்த பின்பு தான் வழக்கு தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரிதான். அவர் உயிருடன் இருந்தால் வழக்கு தாக்கல் செய்திருந்திருக்கமாட்டேன் என்றால் சரிதான். வழக்கு சொத்து பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் மகாராஜா மற்றும் எனது பெயரில் உள்ளது. மாதேஷ்வரன் பெயரில் பட்டா உள்ளதா என்றால் இல்லை. நான் மாதேஷ்வரனுக்கு பத்திரம் எழுதி கொடுத்து உள்ளேனா் என்றால் இல்லை. நான் மாதேஷ்வரனுக்கு தாவா சொத்தை எழுதி கொடுத்து அதை மாதேஷ் அனுபவம் செய்து வந்து பின்னர் மாதேஷ்க்கும் மகாராஜாவிற்கும் பிரச்சனை ஏற்பட்டு வழக்கு மாதேஷ் தாக்கல் செய்து உள்ளார் என்று சொன்னால் அதை பற்றி எனக்கு தெரியாது, நான் பத்திரம் எதுவும் எழுதி கொடுக்கவில்லை.

2.எனக்கு எத்தனை வாரிசுகள் என்றால் ஒரு மகன் முருகன், மகள் பூங்கொடி ஆகும். நான் மாதேஷ்வரனுக்கு பத்திரம் எழுதி கொடுத்து உள்ளேன் என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் பத்திரத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதா என்றால் இல்லை. மேற்படி ஆவணத்தில் எனது மகன் முருகன் சாட்சியாக கையெழுத்து செய்து உள்ளார் என்றால் இல்லை. நான் எனது அண்ணன் மகன் மாதேஷ்க்கு தாவா சொத்தை ஆவணம் எழுதி கொடுத்து விட்டு தற்போது மாதேஷ் இறந்து விட்டதால் மேற்படி ஆவணம் எழுதி கொடுக்கவில்லை என்பதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது ஆவணம் படி பட்டா, சிட்டா மாதேஷ் பெயரில் ஏற்பட்டது என்று சொன்னால் இல்லை. பட்டா எண்.210-ல் என மகாராஜா மற்றும் மாதேஷ் பெயரில் கூட்டு பட்டா ஏற்பட்டு உள்ளது என்றால் சரியல்ல. கிணறு பாகத்தை மகாராஜா வெளி நபருக்கு விற்பனை செய்ய முயன்றதால் மாதேஷ் அவர் மீது வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல. கூட்டு பட்டா விவரம்

எனக்கு தெரிந்து அதை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்ற நேரம் இன்மை காரணமாக குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒம்/- திரு. முஹம்மது அலி, பி.எஸ்.சி. பி.எல்.,
சார்பு நீதிபதி,
ஊத்தங்கரை.